بِسۡمِ اللّٰهِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 29/04/2022 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் அறிவுரைகளின் ஒளியில் நமது வாழ்வைக் கழிப்பதற்காக ஒரு மகத்துவமிக்க செயல்திட்டம் பற்றிய எழுச்சியூட்டக்கூடிய எடுத்துரைப்பு**

أَشْهَدُ أَنْ لَّآ إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۱﴾ اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ﴿۲﴾ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۳﴾ مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ ﴿۴﴾ اِیَّاکَ نَعۡبُدُ وَ اِیَّاکَ نَسۡتَعِیۡنُ ﴿۵﴾

اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ ۬ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَ لَا الضَّآلِّیۡنَ ﴿۷﴾

ரமலான் வந்தது. அதிலிருந்து பலன் பெறுவதற்கு முயற்சி செய்த அனைவர் மீதும் அருள்களைப் பொழிந்தவாறு சென்று விட்டது. அறிவாளியான, ஓர் உண்மையான முஃமின் எப்போதும் நினைவிற் கொள்ள வேண்டும்! ஃபர்ள் நோன்புகளுக்கான மாதம் நிறைவடைகிறதுதான். ஆனால், மற்ற கடமைகளின் தரத்தை மேலோங்கச் செய்ய மற்றும் அவற்றில் முன்னேறிக் கொண்டே செல்வதற்கான நேரம் ஆரம்பமாகிறது. ரமலானுக்குப் பிறகு, நாம் நமது கடமைகள் மற்றும் உரிமைகளை செலுத்துவதற்கான தரங்களை எவ்வாறு நிலைபெறச் செய்ய வேண்டும் என்ற உண்மைத்துவத்தை மறந்துவிட்டால், பிறகு, நாம் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறியது போன்று நமது ரமலானைக் கழிக்கவில்லை.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் உண்மை அடியார் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் எல்லா விவகாரத்திலும் மிகவும் விரிவாக நமக்கு வழிகாட்டியுள்ளார்கள். இது நமது நற்பாக்கியம் ஆகும். நமது வாழ்வைக் கழிப்பதற்கு நமக்கு ஒரு செயல் திட்டம் வகுத்துத் தந்துவிட்டார்கள். நாம் இந்த செயல்திட்டத்திற்கு ஏற்ப நமது வாழ்வைக் கழிப்பதற்கு முயற்சி செய்தால், நிச்சயமாக நாம் நன்மையில் அதிகரிப்பதற்கான மற்றும் முன்னேற்றம் அடைவதற்கான அந்த வழிகளில், ஒரு ரமலானை இன்னொரு ரமலானோடு இணைக்கக்கூடிய அந்த வழிகளில், அதற்கு இடைப்பட்ட காலத்தில் செய்யப்பட்ட பிழைகள் மற்றும் பாவங்களிலிருந்து காப்பாற்றக்கூடிய மற்றும் மன்னிக்கச் செய்யக்கூடிய அந்த வழிகளில் செல்லக்கூடியவர்கள் ஆகிவிடுவோம். எனவே, அன்னாருடைய அறிவுரைகளில் சில அறிவுரைகளை நான் இப்பொழுது எடுத்துரைப்பேன்.

'தொழுகையை விடுவது மனிதனை நிராகரிப்பு மற்றும் இணைவைப்புக்கு அருகில் கொண்டு சென்று விடுகிறது' என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நம்பிக்கை கொண்டவர்களுக்கு மீண்டும் மீண்டும் கவனமூட்டியுள்ளார்கள். பிறகு, **ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறுகிறார்கள்:** கியாமத் நாளன்று எல்லாவற்றுக்கும் முதலாவதாக அடியானிடம் தொழுகையைப் பற்றி கணக்கெடுக்கப்படும். இந்த கணக்கு சரியாக இருந்தால் அவர் வெற்றி பெற்று விட்டார்; ஈடேற்றம் அடைந்து விட்டார். ஆக, இது தான் தொழுகையின் முக்கியத்துவமாகும். எந்த ஒரு குறிப்பிட்ட மாதத்திற்காக மட்டும் குறிப்பாக இல்லை. மாறாக, ஒருநாளில் ஐந்து தொழுகைகளின் பால் கவனமூட்டப்பட்டுள்ளது.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தொழுகைகளின் முக்கியத்துவத்தை நமக்கு மீண்டும் மீண்டும் வலியுறுத்தி, இவ்வாறு அறிவுரை கூறியுள்ளார்கள்:** அல்லாஹ் கூறுகின்றான்:

وَمَا خَلَقْتُ الْجِنَّ وَالْإِنْسَ اِلَّا لِيَعْبُدُوْنِ

மனிதன் இறைவனை வணங்குவதற்காகவே படைக்கப்பட்டுள்ளான் எனும் போது, எதற்காகப் படைக்கப்பட்டுள்ளானோ அந்த இறைவணக்கத்தில் கண்டிப்பாக, இன்பமும் மகிழ்ச்சியும்கூட உச்ச கட்ட அளவு வைக்கப்பட்டிருக்க வேண்டும். எல்லாவற்றிலும் இன்பம் உள்ளது; அதிலிருந்து மனிதன் இன்பம் அடைகிறான் எனும் போது, இறைவணக்கத்தில் ஏன் இல்லை? அன்னார் கூறுகிறார்கள்: நன்றாகப் புரிந்து கொள்ளுங்கள். அதிலும் ஓர் இன்பமும் மகிழ்ச்சியும் உள்ளது. மேலும், இந்த இன்பம் உலகிலுள்ள எல்லா இன்பங்களை விடவும், ஆன்மாவிற்கு இன்பத்தைத் தரக்கூடிய எல்லா விஷயங்களை விடவும் உயர்ந்ததும் மேலானதுமாகும்.

**அன்னார் கூறுகிறார்கள்:** எதைப் பற்றி மனிதனுக்குத் தெரியவே இல்லையோ, எவனது புலன்கள் எல்லாம் செயலிழந்து விட்டனவோ, அவனால் எவ்வாறு ஏதாவதோர் அருளிலிருந்தும் அதன் இன்பத்திலிருந்தும் பலன் பெற முடியும்? அதற்கான தீர்வுக்கும் அன்னார் வழியைக் கூறியுள்ளார்கள். **அன்னார் கூறுகிறார்கள்:** இறைவனிடம் மிகவும் உருக்கத்துடனும் எழுச்சியுடனும் இவ்வாறு துஆ கேட்க வேண்டும்: 'எவ்வாறு பழங்கள் மற்றும் பிற பொருட்களில் விதவிதமான இன்பங்களை வழங்கினாயோ அவ்வாறே தொழுகை மற்றும் இறைவணக்கத்தின் சுவையையும் எனக்கு ஒருமுறை சுவைக்க வைப்பாயாக!' அப்போது தான் சுவை ஏற்படும். ஒருமுறை மனிதனுக்கு இன்பம் வந்து விடும் போது, பிறகு அந்த சுவையைப் பற்றியும் தெரிந்து விடுகிறது. பிறகு, அவன் அதன் பால் கவனமும் செலுத்துகிறான். பாருங்கள்! ஓர் அழகை ஒருவர் ஒரு மகிழ்ச்சியுடன் பார்க்கிறார் எனில், அது அவருக்கு நன்றாக நினைவில் இருக்கிறது. பிறகு ஓர் அசிங்கமான, அருவருப்பான தோற்றத்தைப் பார்க்கிறார் எனில், அதன் அனைத்து நிலைகளும் மொத்த உருவமாக அவருக்கு முன்னால் வந்து விடுகின்றன. ஆயினும், தொடர்பு ஏதும் இல்லை என்றால், எதுவும் நினைவிருப்பதில்லை.

இதே போன்று, தொழாத மக்களின் பார்வையில் தொழுகை ஒரு வரியாகும். அதாவது, தேவை இல்லாமல் காலையில் எழுந்து குளிரில் உளூ செய்து, ஓய்வான உறக்கத்தை விட்டுவிட்டு, பலவிதமான சுக போகங்களை இழந்து தொழ வேண்டி இருக்கிறது. தொழுகைக்கு நிகராக அவருக்கு உறக்கத்தில், தூங்குவதில் அதிக இன்பம் கிடைக்கிறது. **அன்னார் கூறுகிறார்கள்:** அவருக்குத் தெரிவதே இல்லை. பிறகு தொழுகையில் இன்பம் எவ்வாறு கிடைக்கும்? கலப்பற்ற முஃமின் என்றால், தொழுகையை நிரந்தரமாகப் பேண வேண்டும். நிலையான தன்மையோடு தொழுகையை தொழுது கொண்டே செல்ல வேண்டும். அவருக்கு இன்பம் கிடைக்கும் வரை தொழுது கொண்டே இருக்க வேண்டும்.

எவ்வாறு குடிகாரனின் சிந்தனையில் ஓர் இன்பம் இருக்குமோ, எதைப் பெறுவது அவனது நோக்கமாக இருக்குமோ அவ்வாறே சிந்தனையிலும் அவரது முழு ஆற்றல்களின் போக்கும் தொழுகையில் அவர் இன்பத்தைப் பெற வேண்டும் என்றே இருக்க வேண்டும். துஆவும் செய்ய வேண்டும். முயற்சியும் செய்ய வேண்டும். பிறகு, ஒரு கலப்பற்ற தன்மை மற்றும் உத்வேகத்துடன் குறைந்தபட்சம் அந்த போதை பழக்கமுள்ளவனின் மன்றாடல் மற்றும் துடிப்பைப் போன்று இவ்வாறு துஆ செய்ய வேண்டும்: 'அல்லாஹ்! அந்த இன்பம் கிடைப்பதற்கு எனக்கு மகிழ்ச்சியை வழங்குவாயாக!' **அன்னார் கூறுகிறார்கள்:** பிறகு, நான் கூறுகிறேன்! உண்மையாகவே

கூறுகிறேன்! நிச்சயமாக, உறுதியாக இந்த வேதனையோடு துஆ செய்தால் பிறகு இன்பமும் கிடைத்துவிடும். எனவே, இந்த இன்பத்தையும் மகிழ்ச்சியையும் பெறுவதற்காகவும் அந்த நோயிலிருந்து வெளியே வருவதற்கும் கூட துஆ அவசியமாகும். நமது உலக ஆசைகளை நிறைவேற்றுவதற்காக மட்டுமே துஆ செய்யக்கூடாது. மாறாக, இதற்காகவும் துஆ செய்ய வேண்டும். எவ்வாறு நோயிலிருந்து குணமடைவதற்காக மனிதன் எல்லா திட்டங்களையும் மேற்கொள்கிறானோ, சிகிச்சையும் செய்து துஆவும் செய்கிறானோ அதே போன்று அதற்காகவும் துஆ செய்யுங்கள்.

சில மக்கள், 'எப்படி அழகான முறையில் தொழுவது?' எனக் கேட்கிறார்கள். ஆக, இதுதான் அழகான முறையில் தொழுவதற்கான வழிமுறையாகும். அதாவது, நிறுத்தி நிதானமாக தொழுகைக்கான எல்லா அசைவுகளுக்கும் முழுநேரத்தையும் கொடுத்து, முழுமையாக நேரம் கொடுத்து பொறுமையாகத் தொழ வேண்டும். பிறகு, தொழுகையின் உண்மைத்துவத்தைப் புரிந்து அதை நிறைவேற்றுவதன் பால் கவனம் செலுத்திய பிறகு, ஒரு நம்பிக்கையாளர் திருக்குர்ஆன் மீது கவனம் செலுத்த வேண்டும். **ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:** நமது ஜமாஅத் திருக்குர்ஆனின் பணியிலும், அதில் ஆழ்ந்து கவனம் செலுத்துவதிலும் உயிராலும் உள்ளத்தாலும் மூழ்கி விட வேண்டும். இப்போது திருக்குர்ஆன் எனும் ஆயுதத்தைக் கையில் எடுங்கள்; வெற்றி உங்களுக்குத் தான். இந்த ஒளிக்கு முன் எந்த இருளும் நிற்க முடியாது. பிறகு, நன்மைகளை நிலைபெறச் செய்வதற்காக அன்னார் இவ்வாறு வழிகாட்டல் வழங்கியுள்ளார்கள்:

எந்நிலையிலும் மார்க்கத்திற்கு உலகத்தை விட முன்னுரிமை வழங்குங்கள். எனவே, இதற்காக ஈமானில் உறுதிபெறுவது அவசியமான அதே வேளையில் அறிவு மற்றும் செயல் ரீதியான முன்னேற்றமும் அவசியமாகும். இதற்காக முயற்சியும் செய்ய வேண்டும். பிறகு, ரமலானின் அருள்களைத் தொடரச் செய்தவற்காக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் நமக்குக் கூறிய வழிமுறையாவது, பரஸ்பர தொடர்புகளில் உயரிய நல்லொழுக்கத்தை வெளிப்படுத்துவதற்காக ரமலானில் நாம் மேற்கொண்ட முயற்சிகளைத் தொடர வேண்டும். ஒருவர் மற்றவருடன் அன்பு மற்றும் சகோதரத்துவத்தை அதிகரிக்க வேண்டும். ஒருவர் மற்றவருடைய உரிமைகளை செலுத்த வேண்டும் என்பதாகும். **அன்னார் கூறுகிறார்கள்:** நமது ஜமாஅத் ஒருவர் மற்றவர் மீது உண்மையான அனுதாபம் காட்டாத வரை பசுமையாகாது. **அன்னார் கூறுகிறார்கள்:** நமது ஜமாஅத்தில் நமக்கு உடல் வலிமை பெற்றவர்கள் தேவையில்லை. மாறாக, ஒழுக்கத்தில் மாற்றங்களை ஏற்படுத்த முயற்சி செய்யக் கூடிய ஆற்றலைக் கொண்டிருப்பவர்கள் தான் தேவை.

எனவே, ரமலானில் நீங்கள் உருவாக்கிய இறையச்சத்தின் எதிர்பார்ப்பு என்னவென்றால், பரஸ்பர தொடர்புகளையும் சிறந்ததிலும் சிறந்ததாக ஆக்க வேண்டும். ஒருவர் மற்றவருடனான விவகாரங்களிலும் ஒழுக்கம் மற்றும் நற்பண்புகளின் முன்மாதிரியைக் காட்ட வேண்டும். பிறகு, **அன்னார் கூறுகிறார்கள்:** நீங்கள் பரஸ்பரம் உங்களிடையே ஒற்றுமையை ஏற்படுத்துங்கள். கூட்டமைப்பாக செயல்படுங்கள் என்பதை நான் பலமுறை கூறிவிட்டேன். இறைவன் முஸ்லிம்களுக்கு இந்த போதனையைத்தான் வழங்கியுள்ளான். அதாவது, நீங்கள் ஒன்றுபட்டு இருங்கள். இல்லையென்றால், உங்களது ஆற்றல் குறைந்து விடும்.

**ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறுகிறார்கள்:** பரஸ்பரம் அன்பு காட்டுங்கள். ஒருவர் மற்றவருக்காக மறைவான முறையில் துஆ செய்யுங்கள். இது மிகப் பெரிய நன்மையாகும். **ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட அவர்கள் (அலை) கூறுகிறார்கள்:** ஒரு நபர் (மற்றவருக்காக) மறைவான முறையில் துஆ செய்யும் போது

வானவர், 'உனக்கும் அவ்வாறே ஆகட்டும்!' என்று கூறுகிறார். மனிதனின் துஆ ஏற்றுக் கொள்ளப்படவில்லை என்றாலும், வானவரின் துஆ ஏற்றுக் கொள்ளப்படுகிறதுதானே! நினைவில் கொள்ளுங்கள்! உங்களில் ஒவ்வொருவரும் தமக்காக விரும்புவதையே தமது சகோதரருக்காகவும் விரும்பாத வரை, அவர் எனது ஜமாஅத்தைச் சார்ந்தவர் அல்ல. அவர் துன்பத்திலும் துயரத்திலும் இருக்கின்றார். அவரது முடிவு நல்லதாக இருக்காது. **அன்னார் கூறுகிறார்கள்:** இறைவன் மீது அன்பு செலுத்துவதன் பொருள் என்ன? தன்னுடைய பெற்றோர், மனைவி, குழந்தைகள் மற்றும் தனது ஆன்மா, சுருக்கமாக எல்லாவற்றை விடவும் இறைவனின் விருப்பத்தை முன்னிலைப்படுத்த வேண்டும் என்பதுதான் அது. திருக்குர்ஆனில் வருகின்றது:

'நீங்கள் உங்களுடைய மூதாதையர்களை நினைவு கூருவது போல் இறைவனை நினைவு கூருங்கள். இன்னும் கூறுவதாயின், அதைவிட அதிகமான மற்றும் உயர்ந்த தரத்தில் உள்ள அன்பால் நினைவு கூருங்கள். **அன்னார் கூறுகிறார்கள்:** உண்மையான ஏகத்துவத்தை நிலைநாட்டுவதற்காக இறைவன் மீதான அன்பிலிருந்து முழுமையான பங்கு பெறுவது அவசியமாகும். செயல் பகுதியில் முழுமை பெறாதவரை இந்த அன்பு நிருபணமாக முடியாது. ஆகையால், இறைவழியில் உங்களுடைய வாழ்க்கையை அர்ப்பணிப்பது அவசியம். இதுவே இஸ்லாம் ஆகும். இந்த நோக்கத்திற்காகவே நான் அனுப்பப்பட்டுள்ளேன். எனவே, இந்த நோக்கத்திற்காக இறைவன் பாய்ந்தோடச் செய்துள்ள அந்த நீரூற்றின் பால் வராதவர், நிச்சயமாக பேறிழந்தவராக இருக்கிறார். ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்களின் மகத்துவமான கலப்பற்ற தன்மை இதுவாகவே இருந்தது. மகனை தியாகம் செய்வதற்காக ஆயத்தமாகி விட்டார்கள். பல இப்ராஹீம்களை உருவாக்குவதே இஸ்லாத்தின் நாட்டமாகும். ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்களுடைய சிறப்பாக, அவர் நன்றி உடையவராக இருந்தார் என்று அல்லாஹ் கூறியுள்ளான். எனவே உங்களில் ஒவ்வொருவரும் இப்ராஹீம் ஆவதற்கு முயற்சி செய்ய வேண்டும். இறைவன் ஏமாற முடியாது. எவராலும் அவனை ஏமாற்றவும் இயலாது. எனவே, நீங்கள் உண்மையான கலப்பற்றதன்மையும் உண்மையையும் உருவாக்குவது அவசியமாகும்.

இதற்காக நிரந்தரதன்மையுடன் அல்லாஹ்வின் சந்நிதியில் விழுந்து கிடங்கள். இனிவரும் உங்களது ஒவ்வொரு நாளையும் நன்றியுணர்வுடன் இறைவனுடனான தொடர்பில் மேம்படுத்துவதற்கு முயற்சி செய்யக்கூடியதாக ஆக்க வேண்டும். நன்றாக நினைவில் கொள்ளுங்கள்! மரணம் எப்போது வரும் என்று தெரியாது. ஆனால், மரணம் நிச்சயம் வரும் என்பது உறுதியான விஷயம். எனவே, வெறும் வாதங்களை ஒருபோதும் போதும் எனக் கருதாதீர்கள்; மகிழ்ச்சியடைந்து விடாதீர்கள். எப்பொழுது வரை மனிதன் தன் மீது பல மரணங்களை ஏற்படுத்திக் கொள்வதில்லையோ அப்போது வரை அது ஒருபோதும்! ஒருபோதும்! பலன் அளிக்கக்கூடிய விஷயம் அல்ல. பல மாற்றங்கள் மற்றும் புரட்சிகளைக் கடந்து வராத வரை அவனால் மனிதத்தின் உண்மையான நோக்கத்தைப் பெற முடியாது.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:** இது மிகவும் ஆழ்ந்து சிந்திக்க வேண்டிய விஷயமாகும். இதை மேலோட்டமாகக் கருதாதீர்கள். முஸ்லிம் ஆவது எளிமையானதல்ல. ஒரு மனிதன் மகத்துவமிக்க தூதர் (ஸல்) அவர்களின் உம்மத்தீ என்று தன்னைக் கூறிக்கொண்டு, காஃபிர்களைப் போன்று வாழ்வைக் கழிப்பது எந்த அளவு வெட்கத்திற்குரிய விஷயம். ஆக, இப்போது இந்த விஷயத்தை நன்றாகப் புரிய முடியும். அல்லாஹ்வின் நேசத்திற்குரியவர் ஆவது மனிதனின் வாழ்வின் நோக்கமும் குறிக்கோளுமாக இருக்க வேண்டும். ஏனெனில், அல்லாஹ்வின் நேசத்திற்குரியவர் ஆகாத வரை, இறைவனின் நேசம் கிடைக்காத வரை,

வெற்றிகரமான வாழ்வை வாழ முடியாது. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தமது செயலால் கற்றுக்கொடுத்த அந்த இஸ்லாத்தை நீங்கள் உங்களுக்குள் உருவாக்காத வரை இந்த விஷயம் ஏற்படுவதில்லை. **அன்னார் கூறுகிறார்கள்:** நினைவில் கொள்ளுங்கள்! இறைவன் நிலைநாட்ட விரும்புகின்ற அந்த ஜமாஅத் செயல் இல்லாமல் உயிருடன் இருக்க முடியாது. இது எப்படிப்பட்ட மகத்தான ஜமாஅத் என்றால், இதற்கான ஆயத்தப்படுத்துதல் ஹஸ்ரத் ஆதமின் காலம் முதலே ஆரம்பிக்கப்பட்டது. இந்த அழைப்பைப் பற்றி தெரிவிக்காத எந்த நபியும் உலகில் வரவில்லை. எனவே, இதற்கு மதிப்பளியுங்கள். இதற்கு மதிப்பளித்தல் என்பது, உண்மையை உடைய கூட்டம் நீங்கள் தான் என்பதை உங்கள் செயலால் நிரூபித்துக் காட்டுவதாகும்.

ரமலானில் நாம் பெற்ற தர்பிய்யத்தை வருடத்தில் மீதமுள்ள பகுதிகளிலும், மாதங்களிலும் தொடரச் செய்ய வேண்டும். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடைய வார்த்தைகளில் உங்கள் முன் நான் வைத்துள்ள இந்த செயல் திட்டத்தின்படி செயல்பட முழுமையாக முயற்சி செய்ய வேண்டும். நமது தொழுகைகளை அழகிய முறையில் நிறைவேற்ற வேண்டும். திருக்குர்ஆன் படி செயல்பட வேண்டும். ஒருவர் மற்றவரின் உரிமைகளை செலுத்த வேண்டும். ஏகத்துவத்தை நிலைநாட்டுவதற்காக அனைத்து தியாகங்களையும் செய்ய வேண்டும். அப்பொழுதுதான் நாம் பைஅத்திற்கான உரிமையை நிறைவேற்றக் கூடியவர்களாக இருப்போம். அல்லாஹ் நமக்கு இதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக!

உலக நிலைமைகள் சரியாக வேண்டும் என்று உலகிற்காகவும் துஆ செய்யுங்கள். பரஸ்பரம் பகைமை நிலவுகிறது. ஒரு நாடு மற்றொரு நாட்டின் மீது தாக்குதல்கள் தொடுக்கிறது. அவர்கள் அறிவு பெற வேண்டும். இந்த விஷயங்களில் இருந்து தவிர்ந்திருக்க வேண்டும். இல்லை என்றால், உலகம் அதிகமாக அழிவின் பக்கம் செல்கிறது. இவர்கள் தம்மைப் படைத்த இறைவனை அடையாளம் கண்டு கொள்ளும் போது தான் இவர்களால் இதிலிருந்து வெளிவர இயலும். இதேபோன்று பாக்கிஸ்தான், ஆஃப்கானிஸ்தான் மற்றும் அல்ஜீரியா போன்ற நாடுகளில் உள்ள இறைவழியில் சிறை சென்ற அஹ்மதிகளுக்காக துஆ செய்யுங்கள். பாக்கிஸ்தானிலும் உலகின் இன்னும் சில நாடுகளிலும் உள்ள இதுபோன்ற நிலைமைகளுக்காகவும் துஆ செய்யுங்கள். அல்லாஹ் நிலைமைகளை சீர் ஆக்குவானாக! பாகிஸ்தானிலும் அஹ்மதிகள் சுதந்திரமாக வசிப்பார்களாக!

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் குத்பாவின் இறுதியில் மர்ஹூம் அப்துல் பாக்கீ அஷ்ரஃப் சாஹிப் அவர்களின் புகழுக்குரிய நற்பண்புகளையும் இயக்கத்திற்கு அவர்கள் ஆற்றிய தொண்டுகள் பற்றியும் எடுத்துரைத்த பிறகு, ஜனாஸா ஹாஸிர் தொழ வைப்பதற்கான அறிவிப்பு செய்தார்கள்.*

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا

مَن يَّهْدِهِ اللهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِیَ لَهٗ وَنَشْهَدُ أَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ الله

رحمکم الله اِنَّ اللهَ يَأْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِی الْقُرْبٰی وَيَنْهٰی عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ

تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللهِ اَكْبَرُ۔

**(தமிழாக்கம்: மௌலவி அத்தாவுல் முஃக்னீ)**